மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 234/2016 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | கௌசிக்ராஜ் | நாள் | 12.09.2024 |
| தகப்பனார் பெயர் | சந்திரசேகர் | | |

**பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை :–**

1) தாவா சொத்து விவரத்தில் எத்தனை அயிட்டங்களாக சொத்துக்களை காண்பித்துள்ளேன் என்றால், ஒரே அயிட்டமாகத்தான் காண்பித்துள்ளேன். என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சந்து, வாய்க்கால் என வகைபாடு செய்யப்பட்ட தடவழியை 1, 2 பிரதிவாதிகள் தடுக்கக்கூடாது என பரிகாரம் கோரியுள்ளேன். மொத்தம் எத்தனை பிரதிவாதிகள் மீது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், இரண்டு பிரதிவாதிகள் மீது மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன்.

2) மேற்படி சந்து, வாய்க்கால் என வகைபாடு செய்யப்பட்டதாக நான் சொல்லும் நிலையில் யாரால் அவ்வாறு வகைபாடு செய்யப்பட்டது என்றால், வருவாய் துறை ஆவணங்களில் அவ்வாறு காணப்படுகிறது. அரசாங்கத்தால் அவ்வாறு செய்யப்பட்டுள்ளது. எப்போது அவ்வாறு வகைபாடு செய்யப்பட்டது என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. குறிப்பாக என் வழக்கில் எந்த வருடத்தில் அவ்வாறு வகைபாடு செய்யப்பட்டுள்ளது என நான் சொல்லவில்லை என்றால், சரிதான்.

3) அவ்வாறு வகைபாடு செய்யப்பட்டுள்ளதாக நான் சொல்லும் நிலையில் மேற்படி வகைபாட்டிற்குரிய சர்வே எண்ணிற்குரிய புலவரைபடம் எதையேனும் நீதிமன்றத்தில் நாங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால், தாக்கல் செய்துள்ளேன். என் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள ஆவண பட்டியலில் அவ்வாறே ஏதேனும் புலவரைபடத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால், இல்லை. வழக்குரையுடன் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டதோ, அது மட்டும்தான் என் முதல் விசாரணை சாட்சிய பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

4) அவ்வாறு சந்து, வாய்க்கால் என நான் குறிப்பிடும் பகுதி குறிப்பாக எந்த சர்வே எண்ணில் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால், குறிப்பாக உட்பிரிவு செய்யப்பட்ட

சர்வே எண் வழங்கப்படவில்லை. அதனால், மேற்படி சந்து, வாய்க்கால் என நான் சொல்லும் பகுதி எந்த சர்வே எண்ணில் தொடங்கி எந்த சர்வே எண் வரை செல்கிறது என எனக்கு தெரியுமா என்றால், தற்போது எனக்கு அதுகுறித்து தெரியவில்லை. ஆவணங்களை பரிசீலித்துதான் சொல்ல இயலும்.

5) என் வழக்குரையில் நான் மேற்படி சந்து, வாய்க்கால் பகுதி எந்தெந்த சர்வே எண்கள் வழியாக செல்வதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால், அவ்வாறு குறிப்பாக நான் சொல்லவில்லை. ஏனெனில், அது பொது பாதையிலிருந்து ஒரு கிளைப் பாதையாக வருகிறது. அவ்வாறு மேற்படி சந்து, வாய்க்கால் பகுதி பொது பாதையிலிருந்து கிளைப் பாதையாக செல்கிறது என என் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால், இல்லை.

6) என் தந்தைக்கும், எனக்கும் எப்போது பாகபிரிவினை ஆனது என்றால், 2021ம் வருடத்தில் ஆனது. தேதி, மாதம் குறிப்பாக நினைவில்லை. என் தந்தை ஓலைப்பட்டி பஞ்சாயத்தில் என்ன பதவியில் இருந்தார் என்றால், எந்த பதவியிலும் இல்லை. எங்கள் குடும்பத்தில் ஓலைப்பட்டி பஞ்சாயத்தில் யார் என்ன பதவியில் இருந்துள்ளார்கள் என்றால், என் கொள்ளு பாட்டன் பஞ்சாயத்து தலைவராக இருந்தார் என கேள்விப்பட்டுள்ளேன். தற்போது என் சித்தப்பா சரவணன் என்பவர் பஞ்சாயத்து தலைவராக உள்ளார்.

7) கடந்த 2016ம் வருடத்தில் எங்கள் குடும்பத்தில் மேற்படி பஞ்சாயத்தில், யார் பதவியில் இருந்தார்கள் என்றால், யாரும் இல்லை. தாவா சொத்து மேற்படி 2021ம் வருடத்தில் யாருக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால், எனக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது. இவ்வழக்கு நிலுவையில் உள்ள சமயத்தில் பாகபிரிவினை ஏற்பட்டது குறித்தோ அதில் எனக்கு பாகம் ஒதுக்கப்பட்டது குறித்தோ, இவ்வழக்குரையை திருத்தி கூறியுள்ளோமா என்றால், அதுகுறித்து எனக்கு தெரியவில்லை. ஆனால் அதற்குரிய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன்.

8) 2021ம் வருடத்தில் எனக்கு பாகபிரிவினையில் ஒதுக்கப்பட்ட சொத்தின் சர்வே எண் என்னவென்றால், 2, 3 சர்வே எண்கள் உள்ளது. அதனால் என்னால் குறிப்பாக சொல்ல இயலவில்லை. தற்போது இவ்வழக்கில் என்னென்ன சர்வே எண்கள்

காட்டியுள்ளோம் என்றால், சரியாக நினைவில்லை. கடந்த 20.02.2006ம் தேதியில் என் தந்தை ஒரு சொத்தை விலைக்கு வாங்கியதாக என் வழக்கில் கூறியுள்ளேன் என்றால், சரிதான். யாரிடமிருந்து மேற்படி சொத்து என் தந்தையால் கிரயம் பெறப்பட்டது என்றால், சொர்ணம் என்பவரிடமிருந்து கிரயம் பெறப்பட்டது.

9) மேற்படி சொர்ணம் என்பவரது தந்தை பெயர் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. மேற்படி 2006ம் வருடத்தில் என் தந்தை கிரயம் பெற்ற சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. மேற்படி சொத்து எவ்வளவு விஸ்தீரணம் கொண்டது என்றால், தெரியாது. எவ்வளவு தொகைக்க மேற்படி சொத்தை என் தந்தை கிரயம் வாங்கினார் என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. மேற்படி சொத்திற்கு சக்குபந்தி விவரம் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால், தெரியும். மேற்படி சொத்தின் தெற்கே பொதுபாதை உள்ளது. மேற்கில் என் சித்தப்பா சரவணனுக்கு பாத்தியப்பட்ட வீடு உள்ளது. மீதி இருபுறமும் வீடுகள் உள்ளது. அதன் உரிமையாளர்கள் பெயர் எனக்கு தெரியவில்லை.

10) நான் மேலே சொன்னவாறு தெற்கு மற்றும் மேற்கு புறங்களில் அவ்வாறுதான் சக்குபந்தி விவரங்கள் என் தந்தையில் கிரயப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், ஆமாம். மேற்படி சொத்திற்கு மேற்குபுறம் உள்ள என் சித்தப்பாவின் வீடு எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. அதன் விஸ்தீரணமாவது என்ன என்று எனக்கு தெரியுமா என்றால், அதுகுறித்தும் எனக்கு தெரியாது. நான் ஏற்கனவே பொதுப்பாதை என சொல்லியுள்ள நிலம் எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்றால், சர்வே எண் எனக்கு தெரியவில்லை.

11) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9 மாதிரி வரைபடத்தில் என்னென்ன சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என எனக்கு நினைவுள்ளதா என்றால், சர்வே எண்கள் எனக்கு தெரியவில்லை. மேற்படி மாதிரி வரைபடத்தில் 1ம் பிரதிவாதி சுமதி, வெங்கடாச்சலம், சிவஞானம், கணேசன், கோவிந்தசாமி ஆகியோர்களின் நிலங்கள் எந்த சர்வே எண்களில் அமைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அதுகுறித்து எனக்கு தற்போது தெரியவில்லை. 1ம் பிரதிவாதியின் நிலத்தினுடைய அளவுகள் தெரியுமா என்றால், அதுகுறித்து எனக்கு நினைவில்லை. மாதிரி வரைபடத்தில்

மண்பாதை என நான் குறிப்பிட்டுள்ள பகுதியின் அளவுகள் என்னவென எனக்கு தெரியுமா என்றால், 7 அடி அகலம் கொண்டது. நீளம் எனக்கு சரியாக தெரியவில்லை. நான் மாதிரி வரைபடத்தில் கான்கீரிட் பகுதி என காட்டப்பட்டுள்ள பகுதியின் நீள அகலங்கள் என்னவென்றால், 7 அல்லது 8 அடி அகலம் இருக்கும். குறிப்பாக தெரியாது. நீளமும் எனக்கு தெரியாது.

12) மேற்படி மாதிரி வரைபடத்தில் எங்களுக்கு பாத்தியப்பட்டது என எவ்வளவு வீடுகள் காட்டியுள்ளோம் என்றால், 4 வீடுகள் காட்டியுள்ளோம். எந்த சர்வே எண்ணில் காட்டியுள்ளேன் என்றால், சர்வே எண் நினைவில்லை. மாதிரி வரைபடத்தில் மொத்தம் எங்களுக்கு 4 வீடுதான் பாத்தியப்பட்டதாக சொல்லியுள்ளேனா என்றால், மாதிரி வரைபடத்தில் அவ்வளவுதான் காட்டியுள்ளேன்.

13) மாதிரி வரைபடத்தில் பஞ்சாயத்து சாலை என காட்டப்பட்டுள்ள நிலத்திற்கு தென்பகுதியில் யாருடைய நிலம் அமைந்துள்ளது என்றால், எனக்கு சரியாக நினைவில்லை. 4 வீடுகள் நான் காட்டியுள்ள நிலையில், மேற்படி 4 வீடுகள் அடுத்தடுத்து வரிசையாக உள்ளதா அல்லது இடைவெளி விட்டு உள்ளதா என்றால், வரிசையாக உள்ளது. மேற்படி 4 வீடுகளுக்கும் வடபுறத்தில் யாருடைய நிலம் உள்ளது என்றால், சிவஞானம் என்பவரது நிலம் உள்ளது. அதே பகுதியில் தான் சந்தும், வாய்க்காலும் உள்ளது.

14) மேற்படி 4 வீடுகளுக்குண்டான அளவுகள் என்னால் சொல்ல இயலுமா என்றால், சரியாக நினைவில்லை. மேற்படி மாதிரி வரைபடத்திலாவது வீடுகளுக்கான அளவுகள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், இல்லை. மாதிரி வரைபடம் வழக்கிற்காக தவறான அமைப்புகளுடன் எங்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. மேற்படி வீடுகளில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலத்தில் யார் குடியிருந்தார்கள் என சொல்ல வில்லை என்றால், சரிதான். மேற்படி 2006ம் வருடத்தில் என் தந்தையால் கிரயம் பெறப்பட்ட வீடுகள் அடங்கிய சொத்து 2021 பாகபிரிவினையில் யாருக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால், எனக்கு ஒதுக்கப்பட்டது. அவ்வாறு உள்ள நிலையில், மேற்படி சொத்திற்கான சர்வே எண் மற்றும் அளவு எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. அவ்வாறு உள்ள நிலையில், மேற்படி சொத்து என்னுடைய சுவாதீனத்தில்

உள்ளதாக கூறி வழக்குரையில் நான் திருத்தம் ஏதும் செய்யவில்லை என்றால், சரிதான். ஆனால் ஆவணங்களை ஒப்படைத்துள்ளேன்.

15) மேற்படி சொத்திற்கு என் பெயரில் பட்டா மாற்றிக்கொண்டேனா என்றால், மாற்றிக்கொண்டேன். தாவா சொத்து எனக்கும், என் தந்தைக்கும் கூட்டாக பாத்தியப்பட்டது என்றுதான் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். அவ்வாறு உள்ள நிலையில், பாகபிரிவினை ஏற்பட்ட பின் கூட்டுரிமை மாறிவிடுகிறது என்றால், சரிதான். அதாவது இவ்வழக்கில் தடவழி உள்ளதாக நான் கூறும் சொத்திற்குரிய சர்வே எண்ணையோ அல்லது அதன் உட்பிரிவுகளையோ மேலும் அதன் அளவுகளையோ என் வழக்குரை சொத்து விவரத்தில் குறிப்பிடாத நிலையில், மேற்படி சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதை குறிப்பிடாத நிலையில், மேற்படி சொத்து எனக்கும், என் தந்தைக்கும் கூட்டுரிமையாக உள்ளது என வழக்காடுகிறேன் என்றால், சரியல்ல. மேற்படி தடவழியானது அனைவருக்கும் பொதுவானதாகும்.

16) அவ்வாறு மேற்படி தாவா தடவழி பொதுப்பாதை என நான் சொல்லும் நிலையில், இவ்வழக்கை நான் பிரதிநிதித்துவ வழக்காக தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. எங்கள் உரிமைக்காக மட்டும் தாக்கல் செய்துள்ளேன். அதனால், தாவா தடவழியை நான் பொதுப்பாதை என கூறுவது தவறானது என்றால், சரியல்ல.

17) 2ம் பிரதிவாதி பெயரில் ஏதேனும் சொத்து உள்ளதாக நான் என் வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. அவரது மனைவி 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளதாக நான் சொல்லியுள்ளேன். மேற்படி 1ம் பிரதிவாதி யாரிடமிருந்து கிரயம் வாங்கினார் என்றால், ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். ஆனால், யாரிடமிருந்து கிரயம் வாங்கினார் என நினைவில்லை. மேற்படி சொத்தை 1ம் பிரதிவாதி எந்த தேதியில் எவ்வளவு தொகைக்கு கிரயம் வாங்கினார் என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. மேற்படி 1ம் பிரதிவாதியின் பெயரிலுள்ள கிரய ஆவணத்தில் என்ன அளவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது, என்ன சக்குபந்தி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், குறிப்பாக எனக்கு தெரியாது. ஆனால், 1ம் பிரதிவாதியின் மூலப்பத்திரத்திற்கும், 1ம் பிரதிவாதியின் பெயரிலுள்ள கிரயப்பத்திரத்திற்கும் அளவுகள் மாறுபடுகிறது என்பது மட்டும் எனக்கு தெரியும். மேற்படி 1ம் பிரதிவாதிக்கு சொத்தை விற்றவரும், கடந்த

2006ம் வருடத்தில் என் தந்தைக்கு சொத்தை விற்பனை செய்தவரும் ஒரே நபரா என்றால், இல்லை.

18) 1ம் பிரதிவாதிக்கு சொத்தை விற்றவரின், முன் விற்பனையாளர் யார் என எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. 1ம் பிரதிவாதியின் முன் விற்பனையாளரது மூலப்பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால், இல்லை. அதனால், மூலப்பத்திரத்தை பார்க்காமல் நான் அளவுகள் மாறுபடுகிறது என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. மேற்படி மூலப்பத்திரத்தின் நகல்களை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், 1ம் பிரதிவாதியின் மூலப்பத்திரத்தை மட்டும்தான் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவாறனது என்றாலும், இவ்வழக்கில் 1ம் பிரதிவாதியின் பெயரிலுள்ள கிரய ஆவணத்தை மட்டும்தான் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

19) மேற்படி 1ம் பிரதிவாதியின் சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால், சிவஞானம் என்பவருக்கு 1989ம் வருட ஆவணப்படி பாத்தியப்பட்டது. ஆனால் அவர் தான் 1ம் பிரதிவாதிக்கு சொத்தை விற்றாரா என்று எனக்கு தெரியாது. 1989ம் வருடத்தில் மேற்படி சொத்தை சிவஞானம் யாரிடமிருந்து கிரயம் பெற்றார் என எனக்கு தெரியுமா என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது.

20) மேற்படி வா.சா.ஆ.9 மாதிரி வரைபடத்தில் நான் சிவஞானத்தின் சொத்து என காட்டியுள்ள பகுதி மேற்படி 1989ம் வருட கிரய ஆவணத்தின் படி சிவஞானத்திற்கு பாத்தியப்பட்ட மொத்த சொத்தா அல்லது அதில் ஒரு பகுதியா என்றால், என் மாதிரி வரைபடத்தில் சிவஞானத்தின் சொத்து என நான் மஞ்சள் வண்ணமிட்டு காட்டியுள்ள நிலத்திற்கும், மேற்படி 1989ம் வருட கிரய ஆவணத்தின் படி சிவஞானத்திற்கு பாத்தியப்பட்ட சொத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை. மேற்படி சிவஞானத்தின் வேறு ஒரு சொத்து ஆகும்.

21) வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தின் படி 1989ம் வருடத்தில் மேற்படி சிவஞானத்திற்கு பாத்தியப்பட்டதாக சொல்லும் சொத்து தான் பின்னிட்டு 1ம் பிரதிவாதிக்கு கிரயப்படி பாத்தியப்பட்டது என நான் சொல்கிறேனா என்றால், ஆமாம். மேற்படி கிரய

ஆவணத்தில் என்ன சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.

22) 1ம் பிரதிவாதி நிலத்திற்கு வடபுறம் என்ன அமைந்துள்ளது என்றால், பொது கழிவு நீர் சாக்கடையும், பொதுபாதையும் உள்ளது. மேற்படி பொதுபாதையின் அளவு என்னவென்றால், அதுகுறித்து எனக்கு குறிப்பாக தெரியாது. கிழக்கு புறத்தில் யாருடைய நிலம் உள்ளது என்றால், சரியாக தெரியவில்லை. 2021ம் வருட பாகபிரிவினை படி எனக்கு பாத்தியப்பட்டதாக நான் சொல்லும் மேற்படி சொத்து 1ம் பிரதிவாதியின் சொத்திற்கு நான்குபுறத்திலும் ஏதாவது ஒரு பகுதி சக்குபந்தியாக அமைந்துள்ளதா என்றால், இல்லை.

23) என்னிடம் வெங்கடாச்சலமோ, சிவஞானமோ, கணேசனோ, கோவிந்தசாமியோ, பிரதிவாதிகள் மேற்படி பொதுப்பாதையையும், சந்து, வாய்க்காலையும் தடுப்பதாகவோ அதனால் வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்று கூறினார்களா என்றால், அவ்வாறு எதுவும் கூறவில்லை. அவ்வாறு உள்ள நிலையில், 1ம் பிரதிவாதியின் பெயரிலுள்ள சொத்து தவறான அளவுகள் கொண்டுள்ளது என சொல்வது தவறானது என்றால், சரியல்ல.

24) 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை ஆக்கிரமிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எங்களது செல்வாக்கை பயன்படுத்தி, பிரதிவாதிகளுக்கு பல்வேறு வகைகளில் இடையூறு செய்கிறோம் என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.